அவர்களே, புகழேந்தி அவர்களே, பரிதி இளம்வழுதி அவர்களே, (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால், நான் அவையைவிட்டு உங்களை வெளியேற்ற வேண்டிய நிலைமை இருக்கும். எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) அவை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவித்தால், நான் அவையைவிட்டு நீக்க வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) வெளியேற்ற வேண்டியதிருக்கும். (குறுக்கீடுகள்) கடுமையாக எச்சரிக்கிறேன். திரு. சந்தானம், பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையிலே (குறுக்கீடுகள்) கடந்த 1979 ஆம் ஆண்டு...(குறுக்கீடுகள்)

(திரு. துரைமுருகன் பின்புறம் திரும்பிப் பேசிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன், இப்படிப் பின்னாலே திரும்பிப் பேசினால், (குறுக்கீடுகள்) துரைமுருகன், தங்களுடைய நடவடிக்கைகள் சரியில்லை.

திரு. லா. சந்தானம்: 1979 ஆம் ஆண்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால்...

(திரு. துரைமுருகன் சுழன்றுகொண்டும், மேலே பார்வையாளர்கள் மாடத்தைப் பார்த்தும் கைகூப்பிப் பேசினார்.)

3. அரசினர் தீர்மானங்கள்

(அ) பேரவைப் பணிகளினின்றும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை வெளியேற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துரைமுருகன், தங்களுடைய நடவடிக்கை சரியில்லை. (குறுக்கீடுகள்) இப்படிச் சுழன்றுகொண்டு எல்லாம் பேசுவது சட்டமன்றத்தினுடைய கௌரவத்தைப் பாதிக்கும். அவையைப் பாதிக்கும்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டிருந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆகவே, நின்றுகொண்டு இப்போது குழப்பம் விளைவிக்கிற தி.மு.க. உறுப்பினர்களை நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடுகள்) நின்றுகொண்டு குழப்பம் விளைவிக்கிற தி.மு.க.

2005 மார்ச் 15] [பேரவைத் தலைவர்]

உறுப்பினர்களை எச்சரிக்கிறேன். இவர்களை அவையைவிட்டு அகற்றுமாறு அவைக் காவலர்களுக்கு நான் உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) நின்றுகொண்டு குழப்பம் விளைவிக்கிற தி.மு.க. உறுப்பினர்களை அவையைவிட்டு அகற்றுமாறு உத்தரவிடுகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள், தீர்மானமாகக் கொண்டு வாருங்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அவையின் கண்ணியத்தைக் குறைக்கின்ற வகையிலும், பேரவைத் தலைவர் அவர்களை அவமானப்படுத்துகிற வகையிலும், அவையிலே குழப்பம் விளைவித்து, கலாட்டா செய்கின்ற தி.மு.க.–வினரை அவையை விட்டு வெளியேற்ற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையை நடக்கவிடாமல், வேண்டுமென்றே முறைகேடான வார்த்தைகளைப் பயன்படுத்தி, குழப்பம் விளைவிக்க முற்படக்கூடிய தி.மு.க. உறுப்பினர்களை அவையை விட்டு நீக்க வேண்டும் என்கிற அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அவர்கள் அனைவரையும் அவையை விட்டு அகற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் அவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்.)